அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பி.எச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மேல்நிலை / உயர்நிலைப்
பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி
(முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக)

ந.க.எண். 125746/பி1/2019 நாள்.14.08.2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2020 பத்தாம் வகுப்பு தேர்வு முடிவு – மதிப்பெண் சார்ந்த கோரிக்கைகள் – பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் மூலமாக விண்ணப்பித்தல் – பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை ) எண்.379, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.22.07.2020.
2. அரசுத் தலைமைச் செயலாளரின் கடிதம், அரசுக் கடித (நிலை) எண்.395 / பே.மே.2/2020, நாள்.30.07.2020.

*****

2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் **10.08.2020 (திங்கட்கிழமை) காலை 9.30 மணிக்கு** வெளியிடப்பட்டது.

பள்ளி மாணவர்கள் மதிப்பெண் தொடர்பாக குறைகள் ஏதேனும் இருப்பின், **17.08.2020 முதல் 25.08.2020 வரையிலான** காலத்தில் தாங்கள் பயின்ற பள்ளித் தலைமை ஆசிரியர் வாயிலாக இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மேல்நிலை / உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் **17.08.2020 முதல் 25.08.2020 வரையிலான நாட்களில்**, **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று '**Click to access to on-line portal**' என்ற வாசகத்தினை Click செய்து திரையில் தோன்றும் '**SSLC 2020 – Grievance form**' என்ற தலைப்பினை Click செய்து, தங்கள் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள **User Id, Password**–ஐ பதிவு செய்த பின்னர் திரையில் தோன்றும் குறைதீர்க்கும் படிவங்களை (Tamil Format or English Format) பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளி மாணவர்கள் எவரேனும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களில் ஏதேனும் குறைகள் இருப்பதாக கருதி, தங்களை தொடர்பு கொண்டால் அம்மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்டவாறு இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட குறைதீர்ப்பு படிவத்தினை வழங்க வேண்டும்.

1. மாணவர்கள் தங்களது குறையினை குறைத்தீர்ப்பு படிவத்தில் அதற்குரிய கலத்தில் (Grievances of the Candidate) தங்களது கைப்பட எழுதி உரிய இடத்தில் கையொப்பமிட்ட பின்னர், படிவத்தினை பள்ளித் தலைமையாசிரியரிடம் வழங்கவேண்டும்.

2. மாணவர் தங்களது குறையினை எழுதி வழங்கும் குறைதீர்ப்புப் படிவத்தினை பள்ளித் தலைமையாசிரியர்கள் பெற்றுக் கொண்டு, மாணவர் படிவத்தில் தெரிவித்துள்ள குறையினை ஆய்வு செய்து, மாணவர் மதிப்பெண் குறித்த குறை தெரிவிக்கும் பாடங்களில் சம்பந்தப்பட்ட மாணவர் பெற்ற காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளுக்கான மதிப்பெண்களையும், மாணவரது வருகைப் பதிவு விவரங்களையும் பள்ளி ஆவணங்களில் உள்ளவாறு படிவத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். பள்ளித் தலைமையாசிரியரின் அலைபேசி எண்ணையும் படிவத்தில் குறிப்பிடவேண்டும்.

3. பின்னர் பள்ளித் தலைமையாசிரியர் மாணவரது குறை தொடர்பான தங்களது திட்டவட்டமான பரிந்துரை மற்றும் குறிப்புரையினைப் படிவத்தில் பதிவு செய்து, படிவத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்பதை உறுதி செய்த பின்பு உரிய இடத்தில் கையொப்பமிட வேண்டும்.

அதன்பின், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை பதிவெண் / பாடவாரியாக அடுக்கி குறைதீர்ப்பு படிவத்தினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். மாணவர்களின் மதிப்பெண் குறித்த பதிவேகளையும் ஸ்கேன் செய்து அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்ட பணிகள் அனைத்தும் 25.08.2020 –க்குள் முடிக்கப்படுதல்வேண்டும்.

மாணவர்கள் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் இணையதளம் வாயிலாக சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு முடிவுகள் தெரிவிக்கப்படும், பின்னர் அம்முடிவினை மாணவர்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தெரிவிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் அனைத்தையும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்து, இப்பொருள் தொடர்பாக எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காவண்ணம் செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–

இயக்குநர்

நகல்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் கல்வி, புதுச்சேரி

} தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும் இவ்வறிவுரைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
4. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
5. பி2, பி3, பி4 பிரிவு (அலுவலகம்)